

# 3

# உழைப்பின் சிகரம்



ஒரு கிராமத்தின் அருகில் ஒரு மலை இருந்தது. அந்த மலைக்குப் பின்னால் ஒரு நதி ஓடியது. நதி நீரைக் கிராமத்துக்கு வரவிடாமல், அந்த மலை தடுத்துக்கொண்டு நின்றது. தங்கள் கிராமத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான நதியைக் கிராமத்தின் பக்கம் திருப்பி விடுவதற்காக ஒரு வயதான மனிதர் முயற்சி செய்தார். மலையின் பக்கமாக ஒரு கால்வாய் வெட்டத் திட்டமிட்டார். இரவு பகலாக அந்த வேலையைச் செய்து வந்தார். அவரைப் பார்த்தவர்கள் “பெரியவரே! நீங்கள் என்ன செய்கிறீர்கள்?” என ஏளனமாகக் கேட்டனர். “நான் இந்த மலை வழியாகக் கால்வாய் வெட்டி, நதியைக் கிராமத்துக்குத் திருப்பப் போகிறேன் ” என்று தெளிவாகப் பதில் சொன்னார் அந்த முதியவர்.

“ உங்களால் இது முடியுமா? நீங்கள் சாகப்போகிறீர்கள்! ” எனக் கே செய்தனர் சிலர். அதற்கு முதியவர் “நான் உயிரோடு இருக்கும் வரை இந்தக் கால்வாய்க்காக உழைப்பேன். ஒரு நாள் நதி கிராமத்திற்கு வரும் ” என்று உறுதியோடு கூறினார். தொடர்ந்து கடுமையாக உழைத்தார் முதியவர். சில வருடங்களுக்குப்பின் முதியவரால் அந்த மலை வழியாகக் கால்வாய் வெட்டிமுடிக்கப்பட்டது. நதி கிராமத்தை நோக்கி ஓடி வந்தது. ஒளிமயமான ஓர் எதிர்காலமே ஓடி வந்ததாகக் கிராமத்து மக்கள் மகிழ்ந்தனர்.

- சிறுகதையை வாசித்து விவாதித்துக் கருத்தை வெளியிடுங்கள்.
- பாடுபட்டுக் கால்வாய் வெட்டி நதியைத் திருப்பிய பெரியவரை ஊர் மக்கள் எப்படியெல்லாம் பாராட்டி இருப்பார்கள்?



# உழைப்போம்! உயர்வோம்!!



இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே !
யந்திரங்கள் வகுத்திடு வீரே !
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே !
கட ல் மூழ்கிநன் முத்தெடுப் பீரே !

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந்தொழில்கள் செய்திடு வீரே !
மண்ணெடுத்துக் குடங்கள் செய் வீரே !
மரத்தை வெட்டி மனை செய்கு வீரே !

உண்ணக் காய்கனி தந்திடு வீரே !
உழு துநன்செய்ப் பயிரிடு வீரே !
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே !
இழையை நூற்றுநல் லாடை செய் வீரே



காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே !
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே !
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே !

**-தேசிய கவி பாரதியார்**





## செயல்பாடுகள்

- பாடலை இனிய இசையோடு பாடுங்கள்.
- இப்பாடலுக்கு ஒரு ரசனைக் குறிப்பு தயாரியுங்கள்.
- ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- நெசவுக்காரர்கள் நெய்யாமல்

    நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்

  குசவன் செய்திடும் பாண்டமன்றோ?

    குடித்தனம் நடத்திட வேண்டு மென்று.

- இக்கவிதை வரிகளை உழைப்போம்! உயர்வோம்!! என்ற கவிதையோடு ஒப்பிடுங்கள். உடல் உழைப்புத் தொழில்கள் செய்பவர் இல்லை என்றால் என்ன நிகழும்?
- கட்டை பிளக்கும் வேலை என்றாலும்

    கல்லை உடைக்கும் வேலை என்றாலும்

  மட்டமான வேலை இல்லையே

    மண்ணில் எதுவும் தாழ்ச்சி இல்லையே.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

பாடலைத் தொடர்ந்து எழுதுங்கள். பொருத்தமான தலைப்பும் அளியுங்கள்.

# எந்தத் தொழிலும் உயர்ந்ததுதான்

சரவணன் சின்னஞ்சிறு பையன். அவன் நான்காவது படித்துக் கொண்டிருந்தான். அவ்வூரில் அவன் தந்தையின் தொழில் சுமாராகத்தான் நடந்துகொண்டிருந்தது. அதனால் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டது. எப்பாடுபட்டாவது சரவணனைப் படிக்க வைத்து ஏதாவது ஒரு ஆபீசில் பேண்டும் சட்டையும் போட்டு வேலை செய்வதைக் கண் குளிரப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்தான் அவன் அப்பா முனியன். வேலை செய்கிற இடத்தில் போதிய வருமானம் கிடைக்காததால் மக்கள் நெருக்கமுள்ள நகரத்துக்குக் குடும்பத்தோடு வந்து சேர்ந்தான்.

சரவணன் படிப்பில் கெட்டிக்காரனாக இருந்ததாலும் நிறைய மதிப்பெண்களை வாங்கி இருந்ததாலும் நகரத்திலுள்ள பள்ளியில் சுலபமாக இடம் கிடைத்துவிட்டது. சரவணனும் அப்பள்ளியில் நன்கு படிக்கின்ற மாணவன் எனப் பெயரெடுக்க வேண்டும் என்கிற ஆசையில் எல்லா மாணவர்களிடமும் சகஜமாகப் பழக விரும்பினான்.

ஆனால், மற்ற மாணவர்களோ அவனிடம் ஓரிரு வார்த்தைகள் பேசுவதோடு நிறுத்திக்கொண்டார்களே தவிர தங்களுடன் சரவணனைச் சேர்த்துக்கொள்ளவில்லை. தான் புதிய மாணவன் என்பதால் அவர்கள் தன்னோடு பேச, பழகக் கூச்சப்படுகிறார்களோ என எண்ணிய சரவணன் இன்னும் சறிது நாட்களில் எல்லாரும் தன்னுடன் நன்றாகப் பழகி நண்பர்களாகி விடுவார்கள் என எண்ணினான். ஆனால், அவன் எண்ணியபடி நடக்கவில்லை. மற்ற மாணவர்கள் அவனை விட்டு விலகி இருந்தார்கள். அது சரவணனின் பிஞ்சு மனதை நோக வைத்தது.

அன்று ஒரு பையனைப் பள்ளியில் சேர்க்க ஒருவர் காரில் வந்திருந்தார். அவரோடு வந்த பையன் சிவப்பாக, அழகாக, இருந்தான். கறுப்பு நிற பேண்டும் வெள்ளை முழுக்கைச் சட்டையும் அணிந்து, சிரித்த முகமாக இருந்தான். அவனைப் பார்த்தான் சரவணன்.இவனாவது என்னிடம் பழகுவானா என்று அவன் மனம் எண்ணியது.

அந்தப் பையனோ சரவணனைப் பார்க்காது மற்ற பையன்களையே பார்த்துக்கொண்டிருந்தான். அந்தப் பையனைப் பள்ளியில் சேர்த்ததும் தலைமையாசிரியருக்குப் பெரிய கும்பிடு ஒன்று போட்டுவிட்டுப் போய்

விட்டார் அவன் அப்பா. அந்தப் பையன், சரவணனை மற்ற பையன்களை எல்லாம் ஒருமுறை பார்த்தான். பிறகு சரவணனிடம் செல்லாமல் மற்ற பையன்களிடம் சென்று சேர்ந்து கொண்டான். அவனிடம் மற்ற மாணவர்கள் ஏதேதோ கூறினார்கள். அதைகேட்ட அப்பையன் சரவணனைப் புழு பூச்சியைப் பார்ப்பாதுபோல அலட்சியமாகப் பார்த்தான்.

மதியம் சாப்பாட்டு நேரம். எல்லா மாணவர்களும் சாப்பிட்டு விட்டு மரத்தினடியில் விளையாடிக்கொண்டிருந்தனர். தன்னை எல்லாரும் அலட்சியம் செய்து ஏன் ஒதுக்குகிறார்கள் என்பதை அறிந்துகொள்ளாவிட்டால் சரவணனின் தலை வெடித்துவிடும் போ ருந்தது. அவர்களை நோக்கிச் சென்றான். அப்போது அவர்கள் பேசிக் கொண்டிருப்பது சரவணனின் காதில் விழுந்தது.

“உன் அப்பா எங்கேடா வேலைப் பார்க்கிறார்?”

“பேங்கில்”

“எங்கப்பா ரயில்வேயிலே.”

“எங்கப்பா எங்கே வேலை பார்கிறார் தெரியுமா எல்.ஐ.சியில்.”



“எங்கப்பா காஸ் கம்பெனி வைத்திருக்கிறார்.”

“எங்கப்பா வைத்திருக்கிற கடைதான் இந்த ஊரிலேயே பெரிசு.”

சொல் வைத்த மாதிரி எல்லா மாணவர்களும் சரவணனைத் திரும்பிப் பார்த்தனர்.

“டேய்! இவன் அப்பா என்ன வேலை செய்கிறாரு தெரியுமா? காலணி தைக்கிறாரு!” என்றான் ஒரு பையன்.

அதைக் கேட்டு எல்லாப் பையன்களும் " கொல் "லென்று சிரித்தார்கள். மிகவும் அவமானமாகப் போய்விட்டது சரவணனுக்கு. தன்னை இவர்கள் எல்லாம் ஒதுக்கி வைத்ததற்கான காரணம் அவனுக்கு இப்போது புரிந்தது. "சே! என்ன பையன்கள். அப்பா பார்க்கிற வேலையை வைத்துப் பிள்ளையை மதிக்கிறார்களே!"என்று எண்ணினான் சரவணன். என் அப்பாவும் ஒரு ஆபிஸில் வேலை செய்கிறவராக இருக்கக் கூடாதா? என்று ஏங்கி வருந்தினான்.

வீட்டில் சாப்பிடாம ருந்தான்.

"சரவணா! என்னமோ போ ருக்கியே ஏன்? என்று கேட்டான் முனியன்."

"ஒண்ணுமில்லேப்பா" என்றான் சரவணன்

"பள்ளியில் யாராச்சும் ஏதாச்சும் சொன்னாங்களா சரவணா? "

"இல்லேப்பா! " என்றான் சரவணன்.

மறுநாள் பள்ளிக்குப் போனான் சரவணன். எல்லா மாணவர்களும் எப்போதும் போல ஓரங்கட்டிவிட்டார்கள் அவனை.

பள்ளிக்கூடத்தை விட்டு வெளியில் வந்து நடந்தான் சரவணன். கத்திரி வெயில்; தார்ரோடு உருகிக் கொதித்துக்கொண்டிருந்தது.

"தம்பி!" என்று அவனை யாரோ கூப்பிட்டார்கள்.

யாரென்று பார்த்தான் சரவணன்.

அன்று புதுப் பையனைப் பள்ளியில் சேர்க்க வந்தாரே அவர். அன்று அப்பையன் தன் அப்பா என்ன வேலை செய்வதாகச் சொன்னான்? ஆ.. .ஆமாம்!... சினிமா டைரக்டர்... புகழ் பெற்ற சினிமா டைரக்டர்... அவர் ஏன் காரில் வராமல் நடந்துவருகிறார்? கையில் என்ன அறுந்து போன செருப்பு?

சரவணன் படிக்கின்ற பள்ளியின் பெயரைச் சொல் ,'தம்பி அங்கே தானே படிக்கிறே?' என்று கேட்டார் அவர்.

'ஆமாம்' என்று சொல்லுவதற்குள் தன் அப்பாவும் பெருமையாகச் சொல் க் கொள்ளக் கூடிய புகழ் வாய்ந்தவராக இல்லையே என்ற ஏக்கம் சரவணனின் கண்களில் கண்ணீரை நிரப்பி விட்டது.

"ஏன் தம்பி அழுவறே?" என்று கேட்டார் பரிவாக.

உடனே தன் மனதிலுள்ள ஏக்கத்தை மடமட வெனக் கொட்டித் தீர்த்து விட்டான் சரவணன்.

அவனது கண்களைத் துடைத்தார் அவர்.

“தம்பி... இன்று என் கார் பழுதாகி விட்டதால் நான் நடந்து வரும்படி ஆகிவிட்டது. இச்சமயம் பார்த்து என் செருப்பும் அறுந்து விட்டது. அதோ அம்மரத்தடியி ருக்கும் தொழிலாளி இதைத் தைத்துக் கொடுத்தால் மட்டுமே அனல் பறக்கும் இவ்வெயி ல் நடந்து செல்ல முடியும்.



எவ்வளவு புகழ் எனக்கு இருந்தென்ன? அது இந்த உலகத்துக்குச் சிறிதும் பயன்படாத புகழ். பிறருக்குப் பயன்படாத புகழையும் அந்தஸ்தையும் பெற்றிருக்கும் எங்களைவிட உலகில் ஒவ்வொருவருக்கும் பயன்படுகிற உன் அப்பா போன்றவர்கள் சிறந்தவர்களல்லவா? அப்படிப்பட்ட சிறந்த அப்பாவைப் பெற்றிருக்கும் நீ அதற்காகப் பெருமைப்படாமல் மனத்துன்பம் அடையலாமா?... என் போன்றவர்கள் உன் அப்பாவிற்குத் தேவையில்லை. ஆனால் உன் அப்பாவைப் போன்றவர்கள் எங்களுக்கு மிகமிகத் தேவை!” என்றார் அவர். தன் அப்பவைப் பார்க்க இப்பொழுது சரவணனுக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

## செயல்பாடுகள்

- கதையை வாசியுங்கள்., வினாக்கள் தயாரித்து வினாப்போர் நடத்துங்கள்.
- கதையின் மையக்கருத்தைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- சரவணன் தன் அப்பாவின் வேலையை எண்ணி வருத்தப்பட்டது நியாயமா? கலந்துரையாடுங்கள்; கருத்துகளைக் கூறுங்கள்.
- ‘எல்லாத் தொழில்களும் உயர்வானதே’ இக்கூற்றுப் பற்றி விவாதித்துக் கருத்துகளைத் தொகுத்தெழுதுங்கள்.

# உழைப்பால் உயர்ந்த உத்தமர்

"தென்னிந்தியாவின் மாஞ்செஸ்டர்" எனச் சிறப்பித்துக் கூறப்படும் கோயம்புத்தூர், தொழில் நிறுவனங்களின் முக்கிய இடமாக விளங்குகிறது.



மலைகளாலும் கனிவளங்களாலும் பெருமை கொண்ட இந்நகரம் இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட நகரமென்று கூறினால் அது மிகையாகாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கோவை மாவட்டத்தில் 'கலங்கல்'என்னும் சிறு கிராமத்தில்தான் மோட்டார் மன்னர், விந்தை மனிதர், உயர்ந்த தொழில் மேதை எனப் பல அரிய புகழாரங்களைப் பெற்ற திரு. ஜி. துரைசாமி நாயுடு பிறந்தார். அவர் எளிய விவசாயியான திரு. கோபால்சாமி நாயுடு என்பவரின் மகனாக 23-03-1893-ல் பிறந்தார், மகன் பிறந்த மகிழ்ச்சியில் வாழ்வில் இன்பம் கொண்ட கோபால்சாமி அவர்களுக்கு அந்த மகிழ்ச்சியும் இன்பமும் ஓராண்டுதான் நிலைத்தது. ஒரு வயது ஆவதற்குள் அன்னையை இழந்தான் துரைசாமி. பின்னர் அவனை வளர்க்கும் பொறுப்பை அவனது தாய்மாமா திரு. ராமசாமி நாயுடுவிடம் ஒப்படைத்தார் கோபால்சாமி. துரைசாமியின் வாழ்க்கை லெட்சுமி நாயக்கன் பாளையத்தில் தொடர்ந்தது.

கல்வி பெறும் நிலைக்கு வந்தவுடன் குறும்புத்தனங்கள் குறையுமென்ற நினைப்பில் திண்ணைப் பள்ளிக்கூடமொன்றில் துரைசாமியைச் சேர்த்தார் ராமசாமி நாயுடு. துரைசாமி கல்வியில் அவ்வளவாக ஈடுபாடு காட்டவில்லை. குறும்புத்தனங்கள் மட்டும் குறைவின்றிச் செய்தான். இளமைப் பருவத்திலும் தன் குறும்புத்தனத்தையும், கொள்கைகளையும் விடாப்பிடியாகக் கொண்டிருந்தார் ஜி. துரைசாமி நாயுடு.

தோட்டம், வயல், இல்வாழ்வு எனப் பொறுப்புடன் பணிகளைச் செய்தார். சேமிக்கும் பழக்கமும் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டது.'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதுபோல் உழைப்பின் மேல் பற்றும், பிணைப்பும் அப்போதே அவரிடம் காணப்பட்டது.

ஒரு சமயம் தோட்டத்தி ருந்து வயல் வேலைக்குச் சென்று கொண்டிருந் தார். அப்போது ஒரு மோட்டார் சைக்கிள் தன்னை நோக்கி வருவதைக் கவ னித்தார். நாயுடுவுக்கு சற்றுத் தொலைவில் அந்த மோட்டார் சைக்கிள் நின்று விட்டது. மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்தவர் ஓர் அரசு அதிகாரி. லங்காஷயர் என்ற பெயர் கொண்ட அவர் சைக்கிளி ருந்து இறங்கி அதனை நிறுத்தி னார்.அதன் இயந்திரங்களைப் பிரித்துப் பழுதுபார்க்கத் தொடங்கினார். நாயுடு அவரது அருகில் வந்து நின்று அவர் செய்வனவற்றைக் கூர்ந்து நோக்கினார். லங்காஷயர் பழுது பார்த்து முடிந்தபின் அருகி ருந்த நாயுடுவிடம் சிறிது மண் ணெண்ணையும் துணியும் கேட்டார்.

நாயுடு ஓட்டமாக ஓடி வீட்டிற்குச் சென்று அவர் கேட்டவற்றை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். பாகங்களைத் துடைத்து மீண்டும் அவற்றை உரிய இடத்தில் பொருத்தி இயந்திரத்தை இயக்கிப் பார்த்து விட்டுத் தன் கைகளைத் துடைத்துக் கொண்டார். இவை யாவற்றையும் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார் நாயுடு. அரசு அதிகாரி நாயுடுவிடம் விடைபெற்றுச் சென்றார்.

அவர் சென்ற பின்னும், மோட்டார் சைக்கிளின் ஓசையும், பழுதுபார்த்த முறையும் மீண்டும் அதனை இயக்கியதும் நாயுடு அவர்களின் சிந்தனையில் சிறகடித்துக் கொண்டிருந்தன. எப்படியும் நகரத்திற்குச் சென்று இதுபோன்ற வாகனங்களையும், நகரின் வாழ்வினையும் காண வேண்டுமென்ற ஆவல் நாயு டுவின் உள்ளத்தில் முளைவிட்டது.

ஒருநாள் கிராமத்தை விட்டு வெளியேறி அருகிலுள்ள கோயமுத்தூருக் குப் பயணமானார். நகரத்தின் எழிலையும், கிராமத்தினின்றும் மாறுபட்ட ஒரு தன்மையையும் அவர் உணர்ந்தார். தன் உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கும் இலட்சியக் கனவுக்குச் சரியான உலைக்களம் இதுதான் என்று முடிவு செய்தார்.

நகரத்தை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் ஒரு ஓட்ட ல் பணிக்கமர்ந்து, குறைந்த ஊதியத்தையும் நிறைவுடன் ஏற்றுக் கொண்டார். பணி முடிந்தபின் எஞ்சியுள்ள ஓய்வு நேரங்களில் பயனுள்ள வழிக்குச் செலவழித்துப் பல பொருட் களை வாங்கி விற்று அதன் மூலமாகத் தொகை ஈட்டலானார். விரைவில் இரண் டரை ஆண்டு அனுபவத்தை மட்டும் நம்பியே துணிவுடன் பஞ்சாலை அமைக் கும் பணியில் இறங்கினார். அதற்கான முதலீட்டைத் தன் நண்பர்களிடம் கடனா கப் பெற்றார். கோயமுத்தூரை அடுத்துள்ள திருப்பூரில் ஆலை அமைக்க முடிவு செய்து அதற்கான ஆக்கப்பணியில் உற்சாகம் குன்றாது உழைத்தார்.

அவரது அயராத உழைப்பாலும் இடைவிடா முயற்சியாலும் திருப்பூரில் ஒரு பஞ்சாலை எழுந்தது.

இவ்வாறு துவக்கப்பட்ட ஆலை மிகவும் நல்ல முறையில் செயல்பட்டது. முதல் உலகப்போர் துவங்கிய நேரம். பஞ்சாலைத் தொழில் செழித்துச் செல்வம் கொழிக்கத் தொடங்கியது. ஜி.டி. அவர்களின் முயற்சிக்கு அபரிமிதமான லாபத்தை பஞ்சாலை அவருக்குக் கொடுத்தது. வாழ்க்கையில் ஒரு புதிய பாதை யின் உதயமாக அந்த ஆலையில் நம்பிக்கை கொண்டு உழைத்தார் நாயுடு.

மேலும் பொருளீட்ட வேண்டும் என்ற ஆவல், அவரைப் பம்பாய் மாந கரைச் சென்றடையச் செய்தது, அங்கு அவர் செய்து வந்த பஞ்சு வணிகம் அவருக்குப் பெரும் இழப்பைத் தந்துவிட்டது.

திரும்பவும் கோவைக்கு வந்தார் ஜி.டி. நாயுடு. ஆனால் அவரிடமிருந்து திருப்பூர் பஞ்சாலையும் பறிபோயிற்று. தளராத மனம் படைத்த ஜி.டி.நாயுடு தன்னை ஒரு தொழிலாளியாகவே பாவித்துக்கொண்டார், கோவையில் மோட் டார் கார் விற்பனையில் ஈடுபட்டிருந்த ராபர்ட் ஸ்டேன்ஸ் என்ற ஆங்கிலே யரை அணுகினார். அவரது நிறுவனத்தில் தனக்கொரு மெக்கானிக் வேலை தரும்படிக் கேட்டார். ஆனால் ராபாட் ஸ்டேன் நாயுடுவை பஸ் வாங்கி ஓட்டுமா று பணித்தார். அதற்காகத் தானும் கடனாக ஒரு தொகையையும் அளித்தார். இச்சந்திப்பு நாயுடு அவர்களது வாழ்க்கையில் பெரும் வெற்றித் திருப்பு முனை யாக அமைந்தது.

1920–ஆம் ஆண்டு பழனிக்கும் பொள்ளாச்சிக்கும் இடையே பேருந்தை ஓட விட்டார். அது மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

இந்நிலை அதிக நாட்கள் நீடிக்க வில்லை; மோட்டார் தொழில் ந வுறத் தொடங்கியது. விடா முயற்சியே வெற்றிக்கு அறிகுறி என்ற குறிக்கோளுடன் தொழில் புரிந்த ஜி.டி. நாயுடு, ந வுற்ற தொழிலை மேம்படுத்தத் திட்டமிட்டார். அதன்படி பாதிக்கப்பட்ட சிறு மோட்டார் தொழில் நிறுவனங்களை ஒரே நிறுவனமாக ஆக்கி 'யுனைட்டட் மோட்டார் சர்வீஸ்' என்று பெயரிட்டு லாபகரமாக நடத்தினார். இன்றளவும் இந்நிறுவனம் லாபகரமாக வெற்றிநடை போடுகிறது.

மேலும் மின்சார மோட்டார், மோட்டார் வாகனங்களுக்கான ரேடியேட்டர்ஸ்,ரேடியோ, டேப்ரிக்கார்டர், கார்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், பிளேடு, கடிகாரம், சத்துமாவு என இன்னும் பல பொருட்கள் இவரது பல்வேறு தொழிற்சாலைகளில் சிறந்த முறையில் தயாரிக்கப்படுகின்றன.

தொழில் நுட்பத் துறையில் வித்தியாசமான அணுகுமுறையோடு வெற்றி வாகை சூடிய அந்த விந்தை மனிதர், கல்விக்கொள்கையிலும் புதிய அணுகு முறையோடு சிந்தித்தார், ஏட்டுக்கல்விக்குப் பொருள் செலவழித்து நேரத்தை வீணாக்குவதை விடத் தொழிற்கல்வியை ஒவ்வொரு மாணவருக்கும் போதிக்க வேண்டும் என வ யுறுத்தினார்.

தன் கொள்கைகளைத் தானே செயலாக்கத் திட்டமிட்டுச் செயல்பட்ட நாயுடு அவர்களால் 1945 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கோவை மாநகரில் தொழிற் கல்விக் கூடம் ஒன்று தொடங்கப்பட்டது. சர் ஆர்தர் ஹோப் பொறியியல் கல்லூரி என்ற பெயரில் இன்றளவும் இயங்கி வருகிறது.

ஜி.டி. நாயுடு அவர்கள் விவசாயத் துறையிலும் தம் கவனத்தைச் செலுத்தி பல வியத்தகு சோதனைகளை மேற்கொண்டு வெற்றி கண்டார்.

கோயமுத்தூருக்கு அருகாமையில் உள்ள இவரது விவசாயப்பண்ணையில் ஏராளமான தாவரங்களை நட்டு, தனிக்கவனத்துடன் பாதுகாத்து வந்தார். இவர்

விவசாயக்கல்லூரி வளர்ச்சிக்குழுவில் உறுப்பினராக இருந்தார். விவசாய ஆராய்ச்சியில் இவர் ஈடுபட்ட சம்பவம் மிகவும் ருசிகரமானது.

ஒரு முறை தன்னிடமிருந்த துருப்பிடித்த துப்பாக்கியைப் பழுதுபார்த்துச் சுத்தம் செய்து விட்டு அது வேலை செய்யும் நிலையில் உள்ளதா என்பதனை அறியத் தன் பங்களாவிலுள்ள வாழை மரம் ஒன்றின் அடிப்பாகத்தை நோக்கிச் சுட்டார். பின் ஓட்டை விழுந்த அடிப்பாகத்தை எருவிட்டு மூடி வைத்தார். மேலும் இவ்வாறு பல வாழைமரங்கள் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட் டன

. இத்துளைகளில் அழுகிய ரொட்டித்துண்டுகள், உப்பு என்பன வைத்து மூடப் பட்டது. என்ன ஆச்சரியம்! இவை சில தினங்களுக்குள் வளர்ச்சியில் பெரிய அளவை எட்டியிருந்தன.

இச்சோதனையைப் பல்வேறு தாவரங்களில் செயல்படுத்தித் தமது ஆராய்ச் சியில் வெற்றிபெற்றார் அந்த விந்தை மனிதர். பிற்காலத்தில் உழைப்பின் ஒரு மறுபெயராக மாறிவிட்டது ஜி.டி நாயுடு என்னும் பெயர்.

### செயல்பாடுகள்

- பாடத்தை வாசித்து ஜி.டி. நாயுடுவின் வாழ்க்கையில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- ஜி.டி நாயுடுவைப் போன்று உழைப்பால் உயர்ந்தவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி வகுப்பில் வெளியிடுங்கள்.
- பள்ளி ஆண்டு விழாவில் உரையாற்ற ‘உழைப்பின் உயர்வு’ என்ற தலைப் பில் சொற்பொழிவுக் குறிப்பு தயாரியுங்கள்.
- உழைப்பின் மேன்மையைக் குறிக்கும் பழமொழிகள், விடுகதைகள், பொன் மொழிகள் போன்றவற்றைத் திரட்டி வகுப்பில் வெளியிடுங்கள்.
- – ஆக்கப்பணிகள்

  – இடைவிடா முயற்சி

- தளராத மனம்
- தன்னம்பிக்கை

இச்சொற்களைப் பயன்படுத்தி ஒரு நிகழ்ச்சியை எழுதுங்கள்.

- எதிர்பொருள் தரும்படி கீழ்வரும் வாக்கியங்களை மாற்றுங்கள்.
  - எல்லாரும் நண்பர்களாகி விடுவார்கள் எனச் சரவணன் எண்ணினான்.
  - அவரோடு வந்த பையன் அழகாக இருந்தான்.
  - "ஏன் தம்பி அழுகிறாய்?" எனக் கேட்டார் அப்பா.

## நான் தெரிந்துகொண்டவை

- "எல்லாத் தொழில்களும் உயர்வானதே" இக்கூற்றுப்பற்றி உங்களுடைய கருத்துகளை எழுதுங்கள்.

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

- உடல் உழைப்புத் தொழில்களில் மக்களுக்கு ஆர்வம் குறைந்து வருகிறது. காரணங்களை எழுதுங்கள்.

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................






### அ

அகந்தை - தற்பெருமை

அச்சாணி - வண்டிச்சக்கரங்களில் பாதுகாப்பாக வைக்கும் மரத்துண்டு (ஆணி)

அந்தஸ்து - பெருமை

அமுதம் - அமிர்தம், சாவா மருந்து

அயர்தல் - தூங்குதல்

அறம் - தருமம், நற்செய்கை

### ஆ

ஆக்கம் - நன்மை

ஆசிர்வதித்தல் - வாழ்த்துதல்

ஆதங்கம் - கவலை

ஆவல் - ஆர்வம்

### இ

இம்சை - துன்புறுத்தல்

இயக்கம் - அமைப்பு

இலட்சியம் - நோக்கம்

### ஈ

ஈடுபாடு - பங்கேற்பு

### உ

உதிப்பாகம் - சிறு பகுதிகள்

உத்வேகம் - ஆர்வம், வேட்கை

உருக்கிடுதல் - நெகிழவைத்தல்

உற்சாகம் - மகிழ்ச்சி

உன்னிப்பு - கவனம்

### ஊ

ஊட்டுதல் - அருந்தவைத்தல்

ஊதியம் - சம்பளம்

**எ**

எரு - உரம்

**ஏ**

ஏளனம் - இழிவு, கேலி

ஏற்றம் - உயர்வு

**ஓ**

ஓரம் கட்டுதல் - தவிர்த்தல்

**க**

கண்குளிர்தல் - மனநிறைவு, மகிழ்ச்சி

கழனி - வயல்

கனி - பழம்

**கா**

காப்பகம் - பாதுகாக்கும் இடம்

கார் - மழைமேகம்

**கு**

குசும்பு - பொறாமை

குணநிதி - நற்குணங்கள் கொண்டவர்

கும்பல் - கூட்டம்

குழி - ஒரு நில அளவு, பள்ளம்

குறும்புத்தனம் - சேட்டை

குன்றுதல் - குறைதல்

**கொ**

கொட்டுதல் - கீழே இடுதல்

கொணர்தல் - கொண்டு வருதல்

கொழித்தல் - புடைத்தல்

**ச**

சகஜம் - வழக்கம்

**சு**

சுகந்தம் - மணம்

சுலபம் - எளிமை

**செ**

செல்வந்தர் - பணக்காரர்

**சொ**

சொதல் - பொழிதல்

டை

டைரக்டர் - இயக்குநர்

த

தகைமை - ஒழுங்கு, தகுதி, பெருமை

தி

திளைத்திடுதல் - கொதித்தல், கோபம் கொள்ளுதல்

தீ

தீரம் - வலிமை, கரையோரம்

ந

நகராட்சி - நகரத்துக்கான உள்ளாட்சி அமைப்பு

நஞ்சை - நீர்வளம் உள்ள நிலம்

நுட்பம் - கூர்மை

நு

நுண்ணறிவு - கூர்மையான அறிவு

நூ

நூற்றல் - நெய்தல்

நெ

நெருக்கம் - இறுக்கம்

நோ

நோகவைத்தல் - துன்புறச் செய்தல்

ப

பஞ்சாலை - பஞ்சுத் தொழிற்சாலை

பரம்படித்தல் - நிலத்தை ஒழுங்குபடுத்துதல்

பவு - இரக்கம்

பற்று - நெருக்கம், பாசம்

பழுதுபார்த்தல் - செம்மை செய்தல், கோளாறுபார்த்தல்

பா

பார் - உலகம்

பி

பிணைப்பு - இணைப்பு

பு

புரளி - வதந்தி, பொய்ச்செய்தி

புகழாரம் - வாழ்த்து

**பெ**

பெட்டகம் - பெட்டி

பெருமிதம் - பெருமை

**பே**

பேழை - பெட்டி

**பொ**

பொத்தை - ஒரு வகை நிலம்

பொய்மை - பொய்

**ம**

மகசூல் - விளைச்சல்

**மா**

மாண்பு - மாட்சிமை, பெருமை

மாநகர் - பெரிய நகர்

**மு**

முதியவர் - வயது முதிர்ந்தவர்

முப்போகம் - மூன்று முறை

முற்றுதல் - நிறைவு பெறுதல்

**வி**

வியத்தகு - அதிசயி'க்கத்தக்க

விருத்தி - வேலை

**வை**

வையம் - உலகம்